1993 ஏப்ரல் 19]

383—

அரியலூர் அரசுக் கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் துவக்குதல்.

*10343—டாக்டர் சு. மணிமேகலை :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூர் அரசினர் கலைக் கல்லூரியில் எம்.ஏ. வரலாறு, எம்.ஏ. பொருளாதாரம், எம்.எஸ்சி., கணிதம் ஆகிய பட்ட மேற்படிப்பு வகுப்புகளை துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கல்லூரி கல்விப் பணி, அரசினர் கலைக் கல்லூரி அரியலூரில் 1992-93 ஆம் ஆண்டு புதிய முதுநிலை பட்ட வகுப்பு தொடங்குவது சம்பந்தமாக 12-5-1992 அன்று கருத்துரு ஒன்று உரிய படிவத்தில் பூர்த்தி செய்து அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வரும் நிதி ஆண்டிலாவது எம்.ஏ. வரலாறு, எம்.ஏ. பொருளாதாரம், எம்.எஸ்சி., கணிதம் ஆகிய பட்ட மேற்படிப்பு வகுப்புகளை துவங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எம்.ஏ. வரலாறு, எம்.ஏ. பொருளாதாரம் போன்ற பாடப் பிரிவுகளை ஆரம்பிப்பது பற்றியே அரசு இப்போது தீவிரமாக யோசித்து வருகிறது. இவைகள் எல்லாம் மாணவர்கள் படித்து நிறைய பேர் வெளியே வந்துக் கொண்டிருக்கிற நேரத்தில், புதியதாக வேறு சில கல்லூரிகளில் இந்தப் பாடங்களை ஆரம்பிப்பதில் எந்தவித பயனும் இல்லை என்று அரசு கருதுகிறது. ஆகவே மாணவர்களுக்கு பயன்படக்கூடிய விதத்தில் புதிய பாடப் பிரிவுகள் இருக்க வேண்டும் என்ற கருத்திலே தான் இப்போது நாம் இந்தப் பிரச்சினையை அணுகிக் கொண்டிருக்கிறோம்.

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1965 ஆம் ஆண்டு அரியலூர் அரசு கல்லூரி அறிவிக்கப்பட்டது. தற்காலிகமாக கூரை வேய்ந்த கொட்டகைகளில் தான் தற்போது வகுப்புகள் நடந்து வருகின்றன. கடந்த 25 ஆண்டுகளாக இந்த கல்லூரிக்கு நிரந்தரமாகக் கட்டிட வசதி ஏதும் கிடையாது. பட்ட மேற்படிப்பு வகுப்புகள் துவங்க முடியாவிட்டாலும் அட்லீஸ்ட் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிரந்தர கட்டிடம் அந்தக் கல்லூரிக்கு உருவாக்க ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி புதிய கட்டிடம் கட்டுகிற பிரச்சினையை அரசு பரிசீலிக்கிறபோது அரியலூர் கல்லூரியினுடைய தேவையை நாங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 384, திரு. கே. ஆர். முருகானந்தம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

384—

ஆரம்பப்பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளில் இசை ஆசிரியர்கள் நியமனம்.

*10383— திரு. கே. ஆர். முருகானந்தம் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளில் இசை ஆசிரியர்கள் நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : ஆரம்பப் பள்ளிகளில் இசை ஆசிரியர்கள் நியமிக்கும் செயற் குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை. தொடக்கப் பள்ளிகளில் மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ''இசை'' ஒரு பாடமாகவோ அல்லது தேர்வுக்குரியதாகவோ அங்கீகரிக்கப்படவில்லை. எனவே ''இசை ஆசிரியர்'' நியமனம் செய்ய வேண்டிய தேவையில்லை. உயர்நிலைப் பள்ளிகளில் ஏற்கெனவே இசை ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டு வருகின்றனர்.